2017 என்ஏசி தங்க முனை விருது
தேசிய சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

**பங்குபெறுவதற்கான விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

பதிவுப்படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம், கீழ்கண்ட எல்லா விதிமுறைக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு அவற்றின்படி நடக்க பங்குபெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

1. **பங்குபெறுவதற்கான தகுதி**

1.1 சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பங்குபெற வயது வரம்புகள் எதுவும் இல்லை.

1.2 தாங்கள் போட்டியிடும் குறிப்பிட்ட இலக்கியப் பிரிவில் இதுவரை தனிப் படைப்பு எதனையும் பதிப்பிக்காத எழுத்தாளர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். தனிப்படைப்பு என்பது, சிங்கப்பூர் அல்லது அனைத்துலகப் பதிப்பு நிறுவனத்தால், விற்கப்பட்ட, வர்த்தகரீதியாக விநியோகிக்கப்பட்ட, அல்லது பதிப்பிக்கப்பட்ட சிங்கப்பூரர் ஒருவரின் முழுநீளப் படைப்பைக் குறிக்கும். (மின்னியல் அல்லது அச்சுஉருவில்) இதழ்களிலும் தொகுப்புநூல்களில் படைப்புகள் இடம்பெற்றுள்ள எழுத்தாளர்கள் போட்டியில் பங்கேற்கத் தகுதி பெறுவார்கள்.

1.3 இதற்கு முன்னைய தங்க முனை விருது போட்டிகளில் பங்கேற்று முதல் பரிசு பெற்றவர்கள் குறிப்பிட்ட அதே இலக்கியப் பிரிவில் பங்கேற்கத் தகுதி பெற மாட்டார்கள்.

1.4 தேசிய கலை மன்றம், ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்கள் இந்தப் போட்டியில் பங்குபெறத் தகுதி பெற மாட்டார்கள்.

1.5 படைப்புகள் எல்லா விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும் பட்சத்தில், ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட படைப்புகளை அனுப்பத் தகுதி பெற்றிருப்பார். குறிப்பாக, ஒவ்வொன்றும் சொந்தப் படைப்பாகவும் இதற்கு முன்னர் பதிப்பிக்கப்படாத தாகவும் இருக்க வேண்டும்.

1.6 படைப்புகளை ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கலாம்.

1.7 போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் இதற்கு முன்னர் (மின்னியல் அல்லது அச்சு உருவில்) பதிப்பிக்கப்பட்டிருக்கக் கூடாது, பதிப்புக்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கக் கூடாது அல்லது பொது ஊடகம் வழி (இணையம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாட்கள், இதழ்கள்) ஒலிபரப்பாகியிருக்கக் கூடாது. (மின்னியல் அல்லது அச்சு உருவிலான) இதழ்கள் அல்லது தொகுப்புநூல்களில் இடம்பெற்றுள்ள படைப்புகளுக்கும் அனுமதி கிடையாது.

1.8 இதற்கு முன் மற்ற உள்ளூர் அல்லது வெளியூர் போட்டிகளில் பங்கேற்று பரிசு பெற்ற படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. இதற்கு முன்னர் உள்ளூர் அல்லது வெளியூர் போட்டிகளில் பரிசுபெற்ற படைப்புகள் போட்டியிலிருந்து நீக்கப்படும்.

1.9 இந்தப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்படும்வரை, இந்தப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட படைப்புகள் ஏககாலத்தில் மற்ற போட்டிகளுக்கோ, பிரசுரங்களுக்கோ அல்லது ஒலிபரப்புக்கோ அனுப்பிவைக்கப்படக் கூடாது.

1.10 இணைந்து எழுதியவர்களின் படைப்புகளும் மொழிபெயர்ப்புகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

1.11 தவறான அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல்களை தெரிந்தே அளிக்கும் பங்கேற்பாளர் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழப்பார்.

**2. சொந்தப் படைப்புகள்**

2.1 சமர்ப்பிக்கப்படும் படைப்புகள், சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும். படைப்புகள் தனிப்பட்ட முறையில் மற்றவர்களின் ஈடுபாடு இல்லாமல், சுயமாக சிந்தித்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2.2 தங்க முனை விருதின் விதிகளை மீறுயதாகவோ சொந்தப் படைப்பு இல்லை என்று கண்டறிப்பட்டாலோ (உதாரணம்: படைப்புகளில் மற்றவர்களின் ஈடுபாடு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது வேறு எந்த படைப்புகளை அனுமதியின்றிப் பயன்படுத்தப்பட்டால்) அவை போட்டியிலிருந்து நீக்கப்படும். தேசிய கலை மன்றம்/ ஆர்ட்ஸ் ஹவுஸ் ஆகியவற்றுக்கு இழப்பீடு, அபராதம், செலவு, போன்றவற்றை ஏற்கும் பொறுப்பில்லை என்று பங்கேற்பாளர் ஏற்றுக்கொள்கிறார். தவற்றின் முழு பொறுப்பை பங்கேற்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**3. பிரிவுகள்**

3.1 இந்தப் போட்டி நான்கு மொழிகளிலும் (ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்) பின்வரும் பிரிவுகளாக நடத்தப்படும்:

(i) சிறுகதை

(ii) கவிதை

3.2 பங்குபெறுவோர் எந்தத் தலைப்பையும் அல்லது கருப்பொருளையும் ஒட்டி எழுதலாம்.

**4. சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டிகள்**

4.1 பங்குபெறுவோர், ஒரு சிறுகதை அல்லது கவிதைத் தொகுப்பைச் சமர்ப்பிக்கலாம்.

4.2 ஒவ்வொரு இலக்கியப் பிரிவுக்குமான சொல் வரம்பு:

| இலக்கிய ப் பிரிவு | சொல் வரம்பு* |
|---|---|
| சிறுகதை | போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் ஒவ்வொரு படைப்பும் அதிகபட்சமாக 5000 சொற்கள் அடங்கிய ஒரு சிறுகதையை மட்டுமே கொண்டிருக்க வேண்டும். (குறைந்தபட்ச சொல் வரம்பு இல்லை) |
| கவிதை | போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் ஒவ்வொரு படைப்பும் குறைந்த பட்சம் 5 கவிதைகளையும் அதிபட்சமாக 8 கவிதைத் தொகுப்புகளையும் கொண்டிருக்கவேண்டும். சொல் வரம்பு இல்லை. |

*சொல் வரம்புக்குள் தலைப்பும் நிறுத்தக் குறிகளும் சேர்க்கப்பட மாட்டா. சொல் வரம்பை மீறும் படைப்புகள் தகுதி நீக்கப்படும்.

4.3 கீழ்க்கண்ட வகையில் அனைத்து படைப்புகளும் இடைக்க வேண்டும்:

| | படைப்பின் வடிவம் |
|---|---|
| 1. | ஆங்கிலம், மலாய் மொழிகளுக்கான படைப்புகள் “ஏரியல்’ எழுத்துருவில் 11 என்ற எழுதுத்துரு அளவில் சமர்ப்பிக்கப்படவேண்டும். |
| 2. | சீன மொழிகளுக்கான படைப்புகள் “சிம் சுன்” எழுத்துருவில் 11 என்ற எழுதுத்துரு அளவில் சமர்ப்பிக்கப்படவேண்டும். |
| 3. | ஆங்கிலம், மலாய், சீன மொழிகளுக்கான படைப்புகள் தட்டச்சு செய்யப்பட்டிருக்கவேண்டும். |
| 4. | தமிழ் மொழிக்கான படைப்புகள் யூனிகோட் எழுத்துருவில் (முடிந்தவரை லதா எழுத்துருவில்) 12 என்ற எழுத்துரு அளவில் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது தெளிவான கையெழுத்தில் இருக்க வேண்டும். |
| 5. | எல்லாப் படைப்புகளிலும் இரட்டைவரி இடைவெளியும் தாளின் எல்லாப் புறங்களிலும் ஓர் அங்குல இடைவெளியும் விடவேண்டும். |
| 6. | எல்லாப் படைப்புகளும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே இடம்பெற்றிப்பதுடன் A4 வடிவத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். |
| 7. | படைப்பின் தலைப்பும் பங்கேற்பவரின் அடையாள அட்டை எண்ணும் படைப்பின் ஒவ்வொரு பக்கத்தின் வலப்புற மேல்கோடியில் இடம்பெற்றிருக்க வேண்டும் |
| 8. | தலைப்பு மற்றும் அடையாள அட்டை எண்ணைத் தவிர்த்துப் பங்குபெறுபவரின் பெயர், முகவரி, அல்லது அடையாளக் குறியீடுகள் எதுவும் படைப்புப் பிரதியில் இடம்பெற்றிருக்கக் கூடாது. |

| | |
|---|---|
| 9. | சிறுகதையின் இறுதியில் சொற்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும். |
| 10. | ஒவ்வொரு பக்கத்திலும், பக்க எண் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விடப்பட்ட பக்கங்களைக் கொண்ட படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. |

## 5. படைப்புகளை அனுப்பி வைப்பதற்கான முறை

5.1 அதிகாரப்பூர்வ பதிவுப் படிவத்தில் படைப்புகள் இணைக்கப்பட வேண்டும். நகல் எடுக்கப்பட்ட பதிவுப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும். நேரில் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் 2017 ஜூலை 14ஆம் தேதி, வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குள் தி ஆர்ட்ஸ் ஹவுசை வந்தடைய வேண்டும். இணையத்தில் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் 2017 ஜூலை 14ஆம் தேதி, வெள்ளிக்கிழமை இரவு 11.59 மணிக்குள் வந்தடைய வேண்டும்.

5.2 நேரில் சமர்ப்பிக்கப்படும் படைப்புகளுடன் பின்வரும் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

i. கையொப்பத்துடன் பூர்த்திச் செய்யப்பட்ட பதிவுப் படிவம்
ii. 100 சொற்கள் அடங்கிய தன் விவரம், ஏரியல் எனும் எழுத்துருவில் 12 என்ற எழுத்துரு அளவில், இரட்டை வரி இடைவெளி விடப்பட்டு A4 அளவு தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.
iii. அச்சடிக்கப்பட்ட படைப்பின் நான்கு பிரதிகள்
iv. பதிவுக் கட்டணம் அல்லது மின்னிலக்க கட்டணச் சீட்டு

5.3 இணையத்தில் சமர்ப்பிக்கப்படும் படைப்புகளுடன் பின்வரும் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு PDF வடிவத்தில் ,10MB அளவிற்குள் இருக்கவேண்டும்.

i. கையொப்பத்துடன் பூர்த்திச் செய்யப்பட்ட பதிவுப் படிவம்
ii. 100 சொற்கள் அடங்கிய தன் விவரம், ஏரியல் எனும் எழுத்துருவில் 12 என்ற எழுத்துரு அளவில், இரட்டை வரி

இடைவெளி விடப்பட்டு A4 அளவு தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

iii. அச்சடிக்கப்பட்ட படைப்பின் நான்கு பிரதிகள்

iv. மின்னிலக்க கட்டணச் சீட்டு

v. நேரில் ஒப்படைக்கப்படும் படைப்புகள், கடித உறையில் வைக்கப்பட்டு, அவற்றில் கீழ்கண்ட விவரமும் முகவரியும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

"2017 Golden Point Award - Short Story"

அல்லது

"2017 Golden Point Award - Poetry"

The Arts House

1 Old Parliament Lane

Singapore 179429

5.4 ஒவ்வொரு படைப்புடனும் பதிவுக் கட்டணமாக 16 வெள்ளி (ஜிஎஸ்டி உட்பட) அனுப்பிவைக்கப்பட வேண்டும். போட்டியின் தொடர்பில் நடத்தப்படும் பட்டறைகளின் மூலம் அடையாளங்கண்டு சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் பதிவு கட்டணத்தைச் செலுத்த வேண்டயது இல்லை.

i. காசோலைகள் "**ARTS HOUSE LTD** " எனும் பெயரில் எழுதப்பட வேண்டும்.

ii. தி ஆர்ட்ஸ் ஹவுஸ் இருக்கை விற்பனை அலுவலகத்தில் (Box Office) திங்கள் முதல் வெள்ளி வரை, காலை மணி 10 முதல் இரவு மணி 8 வரை கட்டணத்தை ரொக்கமாகவும் செலுத்தலாம்.

iii. கட்டணங்களை http://bit.ly/gpa2017 எனும் இணையப்பக்கத்தில் செலுத்தலாம்.

5.5 ஒரே எழுத்தாளர் பல படைப்புகளை அனுப்பினால், அவை தனித்தனிப் படைப்புகள் எனக் கருதப்பட்டு அவற்றிற்கேற்றவாறு கட்டணம் வசூலிக்கப்படும்.

5.6 தாமதமாக கிடைக்கப்பெறும், அல்லது படிக்க இயலாத, அல்லது முழுமைபெறாத படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாததோடுஅவை பற்றிய மேல்முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

5.7 போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகளின் எழுத்துப் படிவங்கள் திருப்பி அனுப்பிவைக்கப்பட மாட்டா. எனவே பங்கேற்பவர்கள் தங்கள் படைப்புகளை நகல் எடுத்துவைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறப்படுகிறார்கள். அனுப்பிவைக்கப்படும் படைப்புகள் வழியில் காணாமல்போனால் அல்லது சேதமடைந்தால், அதற்கு தேசிய கலை மன்றமோ ஆர்ட்ஸ் ஹவுஸோ  பொறுப்பேற்காது.

**6. தீர்மானித்தல்**

6.1 ஒவ்வொரு இலக்கியப் பிரிவையும் மொழிப் பிரிவையும் இருவர் அடங்கிய சிங்கப்பூர் நடுவர் குழுவும் ஓர் அனைத்துலக நடுவரும் மதிப்பாய்வு செய்வர்.

6.2 எல்லாப் போட்டியாளர்களின் தனிப்பட்ட விவரங்கள் யாவும் இரகசியமாக வைத்திருக்கப்படும். போட்டிக்காலத்தின் போது அவை தேசிய கலை மன்றத்திற்கு மட்டுமே தெரியும். இருப்பினும் போட்டியாளர்களின் பெயர்களும் அவர்களின் தொடர்பு விவரங்களும் போட்டி முடிவடைந்த பிறகு நடுவர்களுக்குக் தெரிவிக்கப்படலாம்.

6.3 நிலைமைக்குத் தகுந்தபடி, விருதை வழங்குவதா வேண்டாமா என்ற முடிவு செய்வதற்கான உரிமையை நடுவர் குழு பெற்றிருக்கும்.

6.4 நடுவர் குழுவின் முடிவே இறுதியானது. எந்த வகையான விவாதமும் கடிதப்போக்குவரத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

## 7. விருதுகள்

7.1 ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் (ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்) உள்ள சிறுகதை பிரிவுக்கும் கவிதைப் பிரிவுக்கும் பின்வரும் பரிசுகள் வழங்கப்படும்:

| | |
|---|---|
| முதல் பரிசு | : $4,000 ரொக்கம், பரிசுக் கோப்பை,சான்றிதழ், $6,000 செறிவூட்டு மானியம் |
| இரண்டாம் பரிசு | : $3,000 ரொக்கமும் சான்றிதழும் |
| மூன்றாம் பரிசு | : $2,000 ரொக்கமும் சான்றிதழும் |

7.2 ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான படைப்புகளைப் படைத்திருந்தற்காக அதிகபட்சமாக மூவர், பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு ஆளுக்கு $500 ரொக்கப் பரிசு வழங்கப்படலாம்.

7.3 ஒரு பரிசை, ஒருவருக்கு மேல் பெற்றால், பரிசுப் பணமும், செறிவூட்டு மானியமும் (ஏதேனும் இருந்தால்) ஆகியவை, தகுதி வரிசையில் அதற்கு அடுத்துள்ள பரிசுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு சமமாகப் பகிர்ந்துகொடுக்கப்படும். மூன்றாம் பரிசுக்கு இருவர் தகுதி பெற்றால், பிரசுரிக்கப்பட்டபடி பரிசை இரு வெற்றியாளர்களும் பெறுவர்.

7.4 முதல் பரிசுக்கான செறிவூட்டு மானியத்தை உள்ளூர், அல்லது வெளியூரில் நடைபெறும் எழுத்துப் பயிலரங்குகள், ஆய்வரங்குகள், இலக்கிய விழாக்கள் ஆகியவற்றில் கலந்துகொள்வதற்கான பதிவுக் கட்டணம், விமானப் பயணக் கட்டணம், தங்கும் மற்றும் உணவு வசதிக்கான கட்டணம் ஆகியவற்றுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அல்லது தங்கள் படைப்பை மதிப்பிடும் அல்லது திருத்தியமைக்கும் ஆசிரியர் சேவைகளுக்கும் எழுத்துக்கலையை மேம்படுத்தும் மற்ற திட்டங்களுக்கும் பயன்படுத்தலாம்.

7.5 வழங்கப்படும் மானியம், விருது வழங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக்குள் பயன்படுத்தப்படவேண்டும். அந்த காலகட்டத்திற்குள் மானியம் பயன்படுத்தப்படாவிட்டால், அது பறிமுதல் செய்யப்படும்.

7.6 மானியத்தை, ரொக்கமாக மாற்றிக்கொள்ளவோ, மற்ற தனிமனிதர்களுக்கு மாற்றிவிடவோ, குறைந்த இலக்கியத் தகுதி அல்லது எவ்வித இலக்கியத் தகுதியும் இல்லாத நிகழ்வுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளவோ முடியாது.

7.7 மேற்குறிப்பிடப்பட்ட பரிசுகள் வழங்கப்படாத பட்சத்தில், அவற்றிற்குப் பதிலாக 500 வெள்ளித் தகுதி விருது வழங்கப்படலாம்.

## 8. முடிவுகளும் பரிவு பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியும்

8.1 2017 சிங்கப்பூர் எழுத்தாளர் விழாவை ஒட்டி விருது வழங்கும் நிகழ்ச்சி 2017ம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி நடத்தப்படும்.

8.2 பரிசு பெறும் அனைவரும் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவேண்டும். பரிசு பெறும் அனைவருக்கும் நிகழ்ச்சி நடைபெறும் காலம் நெருங்கும்போது அது குறித்த விவரங்கள் தெரிவிக்கப்படும்.

8.3 பரிசு வென்றவர்கள் தேசிய கலை மன்றத்தின் அனுமதி பெறாமல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாவிட்டால் அவர்கள் பரிசைத் துறுந்துவிட்டதாக் கருதப்படும்.. தேசிய கலை மன்றத்தின் ஒப்புதலுடன் வெற்றியாளரின் சார்பில் பிரதிநிதி ஒருவர் பரிசைப் பெறலாம்.

8.4 பரிசு பெற்றவர்களின் பட்டியல், தேசியக் கலை மன்றத்தின் இணையத்தளத்தில் விருது வழங்கும் நிகழ்ச்சிக்குப் பிறகு வெளியிடப்படும்.

8.5 ஏதேனும் கருத்துவேறுபாடு ஏற்பட்டால், தேசியக் கலை மன்றம், அல்லது மன்றத்தின் சார்பாக செயல்படும் நடுவர்கள் குழுவின் தீர்ப்பே இறுதியானதாக இருக்கும் என்பதுடன், வேறு எவ்வித விவாதங்களோ கடிதப்போக்குவரத்தோ அனுமதிக்கப்பட மாட்டா.

## 9. பதிப்புரிமை

9.1 படைப்பின் முதல் பதிப்புக்கான உரிமை உட்பட எல்லா உரிமைகளும் வெற்றியாளர்களிடமே இருக்கும். முதல் பதிப்பு எனப்படுவது, (தேசிய கலை மன்றம் தீர்மானிக்கும்படி) மின்னியல் அல்லது அச்சு வடிவில் வெளியிடப்படும் நூல், பருவவெளியீடுகள் அல்லது பதிப்புகளின் முதல் பிரதி பதிப்பையும் விற்பனையையும் குறிக்கும்.

9.2 பரிசு பெற்ற படைப்புகளை வேறு எங்காவது மறுபதிப்பு செய்ய வாய்ப்பு கிடைத்தால் அது பற்றி தங்க முனை விருது (GPA) வெற்றியாளர்கள் உடனே தேசிய கலை மன்றத்திற்குத் (NAC) தெரிவிக்க வேண்டும். வெற்றிபெற்ற பதிப்புகளைப் பதிப்பித்து வெளியிட நற்பெயர்பெற்ற வெளியீட்டாளர்களுடன் பதிப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள தேசிய கலை மன்றத்திற்கு உரிமையுள்ளது.

9.3 வெற்றிபெற்றவர்களின் படைப்புகள் தேசிய கலை மன்றத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் (http://www.nac.gov.sg) எவ்வித உரிமத் தொகையும் வழங்கப்படமால் ஆவணப்படுத்தப்படலாம்.

9.4 பரிசு பெற்றவர்கள் பின்வரும் வரியில் உள்ளதுபோல் NAC GPAக்கு நன்றி தெரிவிப்பர், “ *[எழுத்தாளர்] எழுதிய [கவிதை/கதையின் தலைப்பு] படைப்பு 2017 NAC தங்க முனை விருதுப் போட்டியில் முதல்/இரண்டாம்/மூன்றாம் பரிசு பெற்றது. ”.* பதிப்பித்த நூலின் பதிப்புரிமை அறிவிப்புப் பக்கத்தில் இந்த நன்றி ஏற்பு, மற்ற நன்றி ஏற்புகள் மற்றும் ISBN எண்களுடன் வெளியிடப்பட வேண்டும்.

9.5 எல்லா மொழிப் பிரிவுகளிலும் பரிசு பெற்றவர்கள் தங்களுடைய பரிசு பெற்ற படைப்புகளை கட்டணமின்றி பொது மேடையில், தொலைக்காட்சியில், வானொலியில் வாசிப்பதற்கும் /அல்லது போட்டி தொடர்பான நேர்காணல்களில் கலந்துகொள்வதற்கும் அழைக்கப்படலாம்.

9.6 போட்டி தொடர்பான நடவடிக்கைகளை ஒலி/ஒளிபரப்புவதற்காகவும், விளம்பர நோக்கத்திற்காகவும் போட்டியின் எல்லா அல்லது ஒரு குற்றிப்பிட்ட பகுதியின் நடவடிக்கைகளை பங்கேற்பாளர்களுக்கு தொகை எதுவும் அளிக்காமல் பதிவு செய்துகொள்ளும் உரிமையைத் தேசிய கலை மன்றம் பெற்றிருக்கும். அப்பதிவுகளுக்கான எல்லா உரிமைகளையும் மன்றம் தன்வசம் வைத்திருக்கும்.

## 10. பொது விதிகள்

10.1 போட்டியின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் திருத்தியமைப்பதற்கான உரிமையைத் தேசிய கலை மன்றம் பெற்றிருக்கும்.

10.2 சர்ச்சைகள் ஏற்படும் பட்சத்தில் இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும், சிங்கப்பூரின் சட்டங்களின் வழிநடத்தப்படும்.

2017ஆம் ஆண்டின் முக்கிய தேதிகள்

| தேதி | நிகழ்ச்சி |
| --- | --- |
| 1 மே | இணைய விண்ணப்பங்கள் பெறுதல் தொடங்கும் |
| 2 மே, காலை 10 மணி | நேரடியாக விண்ணப்பங்கள் பெறுதல் தொடங்கும் |
| 14 ஜூலை, இரவு 7 மணி | நேரடி விண்ணப்பங்கள் பெறுதல் முடிவடையும் |
| 14 ஜூலை, இரவு 11.59 மணி | இணைய விண்ணப்பங்கள் பெறுதல் முடிவடையும் |
| 7 நவம்பர் | பரிசு பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி |